


## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்கள் அருளிய

# இந்து வேதம்

மெய்ஞ்ஞானக்கொடி

மெய்ஞ்ஞானக்கொடி

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

**மார்கழி மாத வெளியீடு (Dec2014-Jan2015)**

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,115

# தமிழரைப் பிறமண்ணினர் ஏமாற்றிய விதங்கள்

தமிழிலிருந்துதான் உலக மொழிகள் அனைத்தும் தோன்றின.

# உள்ளுறை

1. சிறு தெய்வங்கள் - விளக்கம்.

மெய்யான இந்துமத வழியில் வாழ்ந்து வந்த தமிழர்கள் இந்த நாட்டிற்கு வந்த பிறமண்ணினர்களால் ஏமாற்றப் பட்ட விதங்களை விளக்கும் கட்டுரை.

2. சீர்திருத்தப் போக்கும் இந்துமதமும் - *'ஓம்சக்தி'* மாத இதழ் ஆசிரியருக்கு அளித்த விளக்கக் கட்டுரை.

3. இந்துமதம் பற்றிய தவறான கருத்துக்களுக்கு கண்டிப்பு, திருத்தம். - *'ஓம்சக்தி'* மாத இதழ் ஆசிரியருக்கு வைதீகம் என்ற சொல்லின் அடிப்படையில் அளித்த விளக்கம்.

4. திருத்தக் கருத்துக் கட்டுரை வெளியிட வேண்டும் திருமடல் - *'ஓம்சக்தி'* மாத இதழ் ஆசிரியருக்கு விடுத்த மடல்.

5. எங்களுக்குத் தெரியும்; உங்களுக்கு?!?!?!... - இந்தத் தலைப்பில் உள்ள கட்டுரைகள்:-

(அ) பிருமண தாசர்களால் கொலை செய்யப் படும் தமிழ்ச் சொற்கள் சில.

(ஆ) இந்துமதமும் ஹிந்து மதமும் - தனிப் பெரும் விளக்கம்.

(இ) சோதி என்பது தமிழ்ச் சொல்லா?

(ஈ) மார்கழி மாதம் பீடை மாதம் என்பது சரியா?

# சிறு தெய்வங்கள் - விளக்கம்

## [கேள்வியும் நானே! பதிலும் நானே!]

பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள், தமிழ்மொழி வளர்க்கவும், காக்கவும், வளவளர்ச்சி செய்யவும் பொறுப்பேற்றிருந்த திங்களங் குலத்து (சந்திர குலத்து) பாண்டியப் பேரரசு மதுரை மாமூதூர் பேரழிவால் சாம்பல் மேடாகிய பிறகு, வாழ்ந்திட்ட காலத்தில் குறித்துள்ள கவலை நிறைந்த, வருத்தம் தோய்ந்த, வெறி மிகுந்த கருத்துக்களே சிறு தெய்வங்களைப் பற்றிய கருத்துக்களை முதன்முதலாக வழங்குகின்றன.

அதாவது, பதினெண்சித்தர் பீடாதிபதிகளில் இந்தப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் படைப்புக்களில்தான்! சிறு தெய்வங்கள், துட்ட தேவதைகள், மண்ணுலகத் தெய்வங்கள், குருதிப்பலி வாங்கும் தெய்வங்கள், எல்லையில் ஒதுக்கி வைக்கப்பட்ட தெய்வங்கள், பதினெட்டு வகைக் காட்டுத் தெய்வங்கள், 48 வகை வீட்டுத் தெய்வங்கள், 48 வகைக் குல தெய்வங்கள், விண்வெளியிலிருந்து வந்த 48 வகை வழிபடுநிலையினர், 48 வகைக் கருவறை மூலவர்கள், 48 வகைச் சித்தர்கள், 48 வகை அருளாளர்கள், 13 வகை முத்தியாளர்கள், 18ஆம் படிக் கருப்புக்கள், ..... என்று அருளுலக ஆட்சியாளர்கள் பற்றிய விளக்கமான, விரிவான, தெளிவான, முறையான பட்டியல்கள் எண்ணற்றுக் குறிக்கப் படுகின்றன.

இதற்குக் காரணம் தமிழர்கள் மொழி உணர்வையும், பற்றையும், பாசத்தையும், உரிமையையும், பெருமையையும், நம்பிக்கையையும், விருப்பத்தையும், ஈடுபாட்டையும், ..... பிறமொழியினரால் சூழ்ச்சியாக

இழக்க நேரிட்டு விட்டால் அருளுலகம் இருண்டு போகும்; அருளுலக ஆட்சியாளர்களின் நேரடித் தொடர்பு இல்லாமல் போகும்; அருளுலக ஆட்சியாளர்களிடமிருந்து அருளை அநுபவப் பொருளாக அடைய முடியாதவர்களாக ஆகி தமிழர்கள் அருளுலகிலும், பொருளுலகிலும் அடிமையுற்று மிடிமைப் பட்டு இடிபட்ட வாழ்க்கை வாழ நேரிடும் என்று அஞ்சியிருக்கின்றார்.

ஏறத்தாழ கலியுகம் தோன்றி 1359 ஆண்டுகள் கழித்து [108 + 243 + 1008 = 1359] இந்தியாவுக்குள் புகுந்த வட ஆரியர்கள் வெகுவேகமாக கன்னியாகுமரி முனை வரை பரவி விட்டார்கள். அவர்கள் கூத்தாடிகளாகவும், கோமாளிகளாகவும், கேளிக்கை விருந்தளிப்பவர்களாகவும், காமக்களியாட்டக் காரர்களாகவும், ஆடுமாடு மேய்ப்பவர்களாகவும், காண்போரைக் கவர்ந்திழுக்கும் கட்டழகுப் பால்வண்ண மேனியராகவும் இருந்திட்டக் காரணத்தினால்தான், மாளிகைகள் முதல் மண்குடிசைகள் வரை அவர்களை வரவேற்று வாழ வைத்தன. ஆனால், வாழத் துடித்த வடஆரியர்கள் நாட்டிலும், ஏட்டிலும், இந்துக்களின் அகவாழ்விலும், புறவாழ்விலும், ஒளியும் வலிவும் பொலிவும் வளமும் செழித்தோங்குவதற்குரிய அடிப்படை என்ன? என்ன? என்ன? என்று ஆராய்ந்தார்கள்.

நுட்பமதி கொண்ட வடஆரியர்கள், பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதத்தின் அருளாட்சி அரசாட்சிக்கும், மக்களுக்கும் உள்ள தொடர்பை அறிந்து அதை அறுத்து உடைத்திட்டால் போதும், தாம் விரைந்து இம்மக்களிடையே கலந்திட இயலும் என்பதால்; மெய்யான இந்துமதத்தைப் பல்வேறு வகையில் பிரித்தும், வேறுபடுத்தியும், மாறுபடுத்தியும், முரண்படுத்தியும் சிதைத்துச் சீரழிவு செய்ய ஆரம்பித்தனர். அப்பணியின் உச்சக் கட்டத்திற்கு <u>மிகப்பெரிய வசதி வாய்ப்புக்களை உருவாக்கித் தந்தவனே வடஆரியப் படை</u>

<u>கடந்த பாண்டிய நெடுஞ்செழியன்</u>. இவன், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் அறிவுரைகளையும் மீறி வடநாட்டில் இருந்து குடும்பத்தோடு கூட்டம் கூட்டமாக வடஆரியர்களை சிறைபிடித்துக் கொண்டு வந்து பாண்டிய நாட்டில் அடிமைகளாக்கினன்.

புதிதாக வந்த அடிமைகளும், ஏற்கனவே தமிழ்நாடெங்கும் இருந்த அடிமைகளும் (வடஆரியர்களும்) ஒன்று சேர்ந்து திட்டம் தீட்டி இந்துமத அருளாளர்களிடையே சிறு தெய்வங்கள், துட்ட [துஷ்ட] தேவதைகள், காவல் தெய்வங்கள், ஊர் எல்லையிலுள்ள தெய்வங்கள், வீட்டுத் தெய்வங்கள், குலதெய்வங்கள்.... இவற்றையெல்லாம் ஆண்டுக்கொருமுறை கும்பிட்டால் போதும் என்று பரிந்துரைகளை எங்கும் பரப்பி; தமிழர்களுக்குக் கிடைத்து வந்த அருளுலகச் சத்திகளை கிடைக்க விடாமல் தடுத்து விட்டனர். இதனல், தமிழர்கள் அருட்கண்ணை யிழந்த குருடர்களானர்கள். அருள் உணவை இழந்து பசியால் வாடி வதங்கி மெலிந்தார்கள், அடங்கி ஒடுங்கினர்கள், அடிமையானர்கள்.

தனி மனித வழிபாடு, அன்றுடம் வீட்டில் நடைபெறும் பூசைமுறை (குடும்ப தெய்வம், இல்லற தெய்வம்), மூத்தோர் வழிபாடு (நீத்தார் வழிபாடு), குலதெய்வ வழிபாடு (முன்னேர் வழிபாடு, குறிப்பிட்ட கூட்டத்தாரின் முன்னேர் வழிபாடு), கிராம தெய்வ வழிபாடு .... என்று பல்வேறு வகையான வழிபாடுகள் பதினெண்சித்தர்களால் உருவாக்கப் பட்டன. இதுதான் பதினெண்சித்தர்களால் உருவாக்கப் பட்ட கரு. இந்த கருவையே அழித்திட முனைந்து செயல்பட்டார்கள் பிறமண்ணினரான பிருமணர்கள்.

**<u>குறிப்பு</u>:-**

தனிமனிதர்கள் நினைத்த நேரம் வழிபடுவதோடு, தாங்கள் விரும்பும் தெய்வத்தைக் குருவாகக் கொண்டு வியாழன், செவ்வாய், ஞாயிறு கட்டாயமாக வழிபட வேண்டும்.

வீட்டுத் தெய்வங்கள் அன்றாடம் மாலையில் வழிபடப் படுவதோடு செவ்வாய், வெள்ளியன்று கட்டாயம் வழிபடப் பட வேண்டும்.

குலதெய்வங்கள் ஞாயிறு, திங்கள், புதனன்று வழிபடப் படுவது கட்டாயம்.

ஊர்க் கிராமத் தெய்வங்களை அமாவாசை, மூன்றாம் பிறை, முழு நிலவு, சந்திர கிரகணம், சூரிய கிரகணம், .... ஆகிய ஐந்து நாட்களில் கட்டாயம் கும்பிட்டேயாக வேண்டும்.

ஒவ்வொரு பூசைக்கும் எள்ளல் முறை, ஏசல் முறை, அழுகை முறை, தொழுகை முறை என்ற நான்கு முறைகள் உண்டு. இவைகளுக்காக உயிர்ப்பு எழுத்துக்கள், புத்துயிர்ப்பு எழுத்துக்கள், காவல் எழுத்துக்கள் என்பன இருக்கின்றன. இதேபோல் உயிர்ப்பு மந்திரங்கள், புத்துயிர்ப்பு மந்திரங்கள், காவல் மந்திரங்கள் என்பன இருக்கின்றன. (மந்திறம், மந்தரம், மந்திரம், மாந்தரம், மாந்தரீகம் ஆக ஐந்தும் உண்டு.)

**இவைகளையெல்லாம் தமிழர்கள் மறக்கவும் துறக்கவும் நுட்பமான செயல்திட்டங்களை உருவாக்கியவர்களே வடஆரியர்கள்**.

# வடஆரியரின் சதித் திட்டங்கள்

1. வாரத்தில் சில நாட்களும், மாதத்தில் சில நாட்களும், ஆண்டில் குறிப்பிட்ட நாட்களிலும் தொடர்ந்து வழிபடுகின்ற அல்லது கும்பிடப்படுகின்ற கிராமப் பொதுத் தெய்வங்கள், எல்லைத் தெய்வங்கள், காவல் தெய்வங்கள் முதலியவற்றை *ஆண்டுக்கொரு முறைதான்* கும்பிட வேண்டுமெனச் செய்து விட்டார்கள். இதேபோல், மேற்படி தெய்வங்களைக் **குருதிப்பலி இல்லாமல், இறைச்சிப் படையல் இல்லாமல்**; தேங்காய், பழம், பால், சர்க்கரை, பாயாசம், பொங்கல்

... என்று படையலிடும் முறைகளை உருவாக்கினார்கள். இவற்றால், தமிழர்கள் காவல் தெய்வங்களின் காவலை இழந்தார்கள்.

2. தலைவர்கள், தளபதிகள், வேளிர்கள், சிற்றரசர்கள், நிலக்கிழார்கள், வணிகர்கள், ஆசிரியர்கள், பூசாறிகள், வழிபடுநிலைய ஊழியர்கள்..... முதலியோர் **குருதிப் பலியிட்டும், இறைச்சிப் படையலிட்டும் வழிபடும் முறை**யை மாற்றி மேற்படி அனைத்து வகையினரும் அருளை அநுபவப் பொருளாக பெறாத வண்ணம் தடுத்தனர், கெடுத்தனர்.

3. சுடுகாடுகளிலும், இடுகாடுகளிலும், புதைகாடுகளிலும், காடுகளிலும் பூசை செய்வதை சிறு தெய்வ வழிபாடு, துட்டத் தெய்வ வழிபாடு, ஆபத்தான வழிபாடு என்று குறைகூறித் தடுத்துக் கெடுத்தனர்.

4. தமிழர்கள் தங்கள் தங்கள் வாழ்வியலின் தேவைகளுக்கேற்ப முத்தீ ஓம்பல், ஐந்தீ வேட்டல் பூசைகளைச் செய்து அருட்சத்தியைப் பெறுவதைத் தடுத்துக் கெடுத்து விட்டனர். அதாவது, வடஆரியர்களான பிருமணர்கள் தாங்கள்தான் யாகம் செய்ய வேண்டும் என்ற முறையை வகுத்தனர். இதனால் தமிழர்கள் மேற்படிப் பூசை செய்வதைத் தடுத்தனர். தமிழர்களும் ஏமாந்தனர்.

5. இல்லறத்தில் இருக்கின்ற பெண்கள்தான் அனைத்து வகையான பூசைகளையும் வீட்டுத் தெய்வங்களுக்கும், நாட்டுத் தெய்வங்களுக்கும், 18 வகைக் காட்டுத் தெய்வங்களுக்கும், கிராமக் காவல் தெய்வங்களுக்கும் பூசை செய்யும் பொறுப்பினைத் தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்றிருந்தார்கள். இதுவே, பதினெண்சித்தர்களின் பூசாவிதி. வடஆரியர்கள் சிறு பெண்கள் பூசை செய்யக் கூடாது, பருவமடைந்த கன்னிப் பெண்கள் சில பூசைகளை செய்யக் கூடாது, திருமணமாகி இல்லறத்திலிருக்கும் பெண்கள் பல பூசைகளைச் செய்யக் கூடாது, விதவைகளும், தீட்டுப் பெண்களும் (மாதவிடாய் காலத்து) பூசையே செய்யக் கூடாது.... என்று படிப்படியாகப் பல திட்டங்களைப்

பரிந்துரைத்து முடிவில் பெண்களே பூசை செய்யக் கூடாது, ஆண்கள்தான் பூசை செய்ய வேண்டும் என்று கூறித் தடுத்திட்டனர். அப்பாவித் தமிழர்களும் ஏமாந்தார்கள், நலிந்தார்கள், மெலிந்தார்கள்.

குறிப்பு:- பதினெண்சித்தர்களின் குருபாரம்பரியத்தில் மிகத் தெளிவாக **"ஏழுபருவத்து பெண்களும், எல்லா நாட்களிலும் ஏத்திப் பூசை செய்ய சத்திகள் சித்திக்கும் காவல் தெய்வங்களுக்கு"** என்ற குறிப்பு இருக்கின்றது. இது மட்டுமல்லாது **"அளப்பரிய அண்ட பேரண்டச் சத்திகளையும், ஏழு பருவத்து பெண்களின் பிண்டத்துக்குள் கொண்டு வந்து தேக்கி மண்ணுலகத் தெய்வங்களை வழங்கிடு, கருவறைகளுக்கு அருள்வார்த்திடு"** என்ற குறிப்பும் இருக்கின்றது. ஆனால், வடஆரியர்கள் அருளுலகில் பெண்களைத் தீண்டத் தகாதவர்களாக்கி விட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், புனிதப் பிறவிகளான பெண்களை பாவப் பிறப்புக்கள் என்று துணிந்து கூறித் தவறான கருத்தை வளர்த்து விட்டார்கள்.

6. தமிழர்கள் அன்றாடம் ஆறுகாலம் அவரவர் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப ஆலயங்களுக்குச் சென்றோ, அலுவல் புரியுமிடங்களிலிருந்தோ, வீடுகளிலிருந்தோ தொழுகை செய்யும் பழக்கத்தைக் கைவிடும் படிச் சதிச் செயலைச் செய்தனர். இப்படிப்பட்ட செயலை எவ்வாறு திட்டமிட்டு செயலாற்றி வெற்றி கண்டனர் என்பது புரியவில்லை, தெரியவில்லை. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற மூதுரைப் படிப் பார்த்தால் கிராம தெய்வக் கோவில்கள் எல்லாமே ஆலயங்கள்தான். வட ஆரியரின் நுட்பதிட்ப முயற்சிகளால், சதிச் செயல்களால் ஆறுகாலம் தொழுகைகள் நிகழ்த்தப் பட்ட ஆலயங்களான கிராமத் தெய்வங்கள் வாழுமிடங்கள் தவறான பூசை முறைகளாலும் காலந்தாழ்த்தியப் பூசை முறைகளாலும் பாழடிக்கப் பட்டன. அப்படி இந்த ஆலயங்கள் கோயில்களாக்கப் பட்டன. இதனையே குதம்பைச் சித்தர்,

*"ஆலயம் கோயிலாச்சுதடி குதம்பாய்!*
*கோயில் ஆலயமாச்சுதடி குதம்பாய்!*
*அருளுலகு இருளுலகாச்சுதடி குதம்பாய்!*
*மருளாளியும் அருளாளியும் மறைந்தாரடி குதம்பாய்!*
*கருக்களேதடி குருக்களேதடி குதம்பாய்!*
*தருக்களேதடி திருக்களேதடி குதம்பாய்!*
*உருவங்களே தெய்வங்களாச்சுதடிக் குதம்பாய்!*
*அருவுருவங்கள் கருவறைத் திறந்தோடினதடிக் குதம்பாய்!*
*விண்ணேது மண்ணேது குதம்பாய்!*
*பூசைக்கு ஆசை வைக்காதடி குதம்பாய்!"*

என்று பாடிவிட்டுச் சென்றுர். இது குறித்து சிவவாக்கியர், இடைக் காடர், கடுவெளிச் சித்தர், வெட்டவெளிச் சித்தர், போகர், .... முதலியவரின் பாடல்கள் நிறைய இருக்கின்றன. விரிவஞ்சி இத்துடன் விடுக்கின்றேம்.

எனவேதான், 10வது பதினெண்சித்தர் பீடாதிபதிக்கும் பிறகு ஐநூறு அறுநூறு ஆண்டுகளுக்கிடையில் பிறமண்ணினரான பிருமணர்கள் அனைத்து வகையான கிராம நகர வட்டாரக் காவல் தெய்வங்களின் செல்வாக்குகளை அழித்தொழித்து விட்டனர். அதாவது ஆலயங்களைக் கோயில்களாக்கி **சமசுகிருத மொழியில் பூசை செய்து வலுவிழக்கச் செய்தனர்**. தங்களால் நெருங்க முடியாத ஆலயங்களில் பிறரும் பூசை செய்து பயனடைய முடியாமல் தடுத்து விட்டனர்.

அதாவது, முடிந்த வரை காவல் தெய்வங்களை தங்களுக்குரியவைகளாக்க முற்பட்டனர். முடியாதவைகளை அழித்தொழித்து விட்டனர். இதற்கு அப்பாவித் தமிழர்கள் துணையாகி விட்டனர். அரசன் முதல் ஆண்டி வரை வடஆரிய வேத மதத்தையும் சமசுகிருத ஆரிய நெறியையும் இந்துமத முறையாக ஏற்றுப் போற்றி வீழ்ந்தார்கள்.

கி.பி. 785இல் 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் அருளாட்சி அமைப்புப் பணியை மேற்கொண்டார்.

# இவர் கண்டதும் விண்டதும்

1. இவர் வடஆரியர்களின் வேத மத மாயையிலிருந்தும், சமசுகிருத மொழியின் பிடியிலிருந்தும் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும் விடுவிப்பதால்தான் அருளாட்சி அமைக்க முடியும் என்று கண்டறிந்தார். இப்பேருண்மையினை விண்டுரைத்திட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களை உருவாக்கி காவல் தெய்வங்களைப் புத்துயிர்ப்புச் செய்யும் பணியைச் செய்திட்டார். அதாவது, கிராமங்கள், நகரங்கள் முதலியவற்றின் எல்லைத் தெய்வங்களுக்குக் குருதிப் பலியும், இறைச்சிப் படையலும் வழங்கி பதினெண்சித்தர்களின் பூசாவிதிப் படி அருளூறு எழுத்துக்களையும், வாசகங்களையும், வாக்கியங்களையும், ஆணைகளையும் பயன்படுத்தி காவல் தெய்வங்களின் கருவறைகளில் அருளூற்றெடுக்கச் செய்திட்டார்.

2. கருவறையின் மேலே நெடிதுயர்ந்த கோபுரங்களைக் கட்டும் கருவறைப் புரட்சித் திட்டத்தைச் செயலாக்குகிறார். இதன்படி முதன்முதலாகக் கட்டப்பட்டது தஞ்சைப் பெரிய கோயில்; கங்கை கொண்ட சோழபுரம், திருபுவனம் கோயில் ..... உள்ளிட்ட 48 வகையான கோயில்களை வரைபடத்துடன் செப்புத் தகடுகளுடன், மரச்சிலைகளுடன் தயாரித்துச் செயலாக்கும் திட்டத்தையும் வழங்கினார்.

3. ஆலயங்கள் புத்துயிர்ப்புப் பெறுவதற்காகத் தனது தேவியர் 240 பேரையும், தனது அடியான்களிலும், அடியாள்களிலும், அடியார்களிலும் ஆர்வமுடைய எண்ணற்றோர்களையும் அவரவர்

விருப்பப் படி காவல் தெய்வ ஆலயக் கருவறைகளில் அருவுருவச் சமாதியில் நிறையச் செய்திட்டார்.

குருதி முழுக்காட்டுகளாலும், குருதி அவிர்பலிகளாலும், இறைச்சிப் படையல்களாலும், முத்தீ ஓம்பலாலும், ஐந்தீ வேட்டலாலும் காளிகள், கருப்பழகிகள், காடேறிகள், காட்டேரிகள், மாடேறிகள், மோகினிகள், இடாகினிகள், இயக்கிகள், மாசாக்கிகள், பேச்சிகள், காத்தாயிகள், கருப்பாயிகள், முத்தாலம்மன்கள், அங்காளம்மன்கள், பகவதியம்மன்கள், வீரமாக்கள், ஆண்டிச்சிகள், கன்னிகள், கண்ணிகள், நீலிகள்,..... முதலிய எண்ணற்ற வகையான பெண் தெய்வங்களும்; ஐயனூர்கள், காரணமூர்த்திகள், இலாடசன்னுசிகள், கருப்பண்ணசாமிகள், முத்தையாக்கள், முனீசுவரர்கள், வீரன்கள், சூரன்கள், வளியூரான்கள், உத்தண்டராயர்கள், பெத்தாரண்கள் (போத்தாரண்கள்), பத்தாரண்கள், புத்தாரண்கள், முத்தாரண்கள், சீவன்முத்தாரண்கள், சித்தியாரண்கள், கருப்புக்கள்.... முதலிய ஆண் தெய்வங்களையும்; காவிரிக் கரையையும், வைகைக் கரையையும் ஒட்டி விரிந்து புத்துயிர்ப்புச் செய்தார். இப்படிப் புத்துயிர்ப்புச் செய்த காவல் தெய்வங்கள் மூலம்தான் மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கி ஆயிரமாயிரம் அடியான்களை, அடியாள்களை, அடியார்களை உருவாக்கித் தென்னிந்தியா முழுவதும் அருட்படையைத் திரட்டினுர். அதன்மூலமே அருட்பேரரசை உருவாக்கினுர்.

இந்தக் காவல் தெய்வங்களின் அருட்கொடையால்தான் முதலாம் இராசராசன் இந்தியத் துணைக்கண்டத்தையும் கடந்து பல வெளிநாடுகளிலும் தனது வெற்றிகளை நிலைநாட்டி உலக அருட்பேரரசை நிலைநாட்டினுன். ஆனுல், பிறமண்ணினரான பிருமணர்கள், தங்களின் வேத மதத்தையும், சமசுகிருதத்தையும் நுட்பதிட்பமான சதிச்செயல்களின் மூலம் பிற்காலச் சோழப் பேரரசுக் குடும்பங்களில் செல்வாக்குப் பெறச் செய்திட்டனர். இம்மாபெரும் வீழ்ச்சி நிலைமை தஞ்சைப்

பெரிய கோயிலைப் பிருமணர்களிடம் ஒப்படைத்த இராசராசனின் செயலே வெளிப்படுத்தியது. அத்தவறு எவ்வாறு நிகழ்ந்தது என்பதைக் காவிரியாற்றங்கரைக் கருவூரர் உணர்ந்தார். அதாவது குருகுலத்தார் போல் அரசகுலத்தார் இந்துமத ஏட்டறிவிலும், பட்டறிவிலும், பயிற்சியிலும், முயற்சியிலும் தொடர்ந்து ஈடுபடுமாறு சட்டம் செய்யாததுதான் அரசகுலம் வடஆரியருக்கு அடிமைப்பட நேர்ந்ததின் காரணமாகும்.

ஆனால், மலைப் பாம்பென வடஆரியர்கள் விழுங்க ஆரம்பித்திட்ட அரச குடும்பத்தாரை அவரது ஆத்திரமும், முன்கோபமும், அவசரமும், பொறுமையிழப்பும் காப்பாற்ற முடியாமல் செய்து விட்டன. அவர், தமது தவப்புதல்வனை கருவூர்த் தேவரை அழைத்து அனைத்து வகையான இலக்கியங்களையும் பாதுகாப்பதற்கு வேண்டுமான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறிவிட்டு; தனது பொன்னிறப்பாவை தேவியாரோடு, பல்லவகுல தேவியரிருவர் முன்னும் பின்னும் விளக்கேந்திச் செல்ல நிலவறைக்குள் சென்று நிறைந்து விட்டார்.

கருவூர்த் தேவரோ அருளாட்சி மலர்ச்சி வளர்ச்சிப் பாதுகாப்பிற்காக தமது தந்தை திட்டமிட்டுக் கொடுத்துச் சென்ற 48 கோயில்களைக் கட்டும் பணியிலும், அனைத்து வகையான இலக்கியங்களை நகலெடுத்துப் பாதுகாக்கும் பணியிலும் பெரும்பொழுதைச் செலவிட்டார். எனவே, அருட்பயிர் விளைவிக்கும் அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் உருவாவது தடையேற்பட்டு விட்டது. காவல் தெய்வங்களின் ஆலயங்களில் அருளூற்றுக் கண்கள் அடைபட்டு விடாமல் பாதுகாக்கும் பணியும் தடைப்பட்டு விட்டது.

வடஆரியர்கள் தங்களது கட்டழகு மேனிகளாலும், சதித் திட்டங்களாலும், சமசுகிருதம் எனும் நஞ்சாலும், வேத மதம் என்னும் வலையாலும் பதினெண்சித்தர்களின் இந்துமத

அருளாளர்களையும், அருள் ஊற்றுக்களையும் மயக்கி, நஞ்சிட்டு, வலையில் பிடித்து..... அழித்திட்டார்கள். தமிழர்கள் மீண்டும் தங்களின் காவல் தெய்வங்களின் ஆலயங்களிலிருந்து சத்திகளையும், சித்திகளையும் பெறுவதில் தடையேற்பட்டு விட்டது...... வீழ்ச்சி பெற்று விட்டது.

இப்பொழுது மீண்டும் அருளாட்சி அமைப்புப் பணி துவங்கியுள்ளதால் மீண்டும் காவல் தெய்வங்களின் ஆலயங்களைப் புத்துயிர்ப்புச் செய்யும் பணி விரிந்தும் விரைந்தும் துவக்கப் பட்டுள்ளது. கிராமங்கள், குக்கிராமங்கள், பட்டிதொட்டிகள், சிற்றூர்கள், பேரூர்கள் என்ற வேறுபாடின்றி நமது அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் பதினெண்சித்தர்களின் பூசாவிதிப்படி அனைத்துக் காவல் தெய்வங்களையும் புத்துயிர்ப்புச் செய்யும் பணியினை வெற்றியுறச் செய்து அருளை அநுபவப் பொருளாக வழங்கி அருளாட்சி அமைப்புப் பணியை வெற்றி பெறச் செய்யுங்கள். இனிமேலும் வழிபடப்படும் கடவுள்களுக்குள் வேறுபாடு பாராட்ட வேண்டாம், எச்சரிக்கை!

நகலெடுத்தவர்: சித்தரடியான், சித்தர் மகன் இரா. சீனிவாசன் B.B.A.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

சென்னை-11
24/3/86

# சீர்திருத்தப் போக்கும் இந்துமதமும்

**அனுப்புனர்:-**
அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற
கூத்தர்ப்பெருமான் சன்னிதானம்
C/O குவலய குருபீடம், ஞாலகுரு சித்தர் கருவூரூர்,
சென்னை.

**பெறுநர்:-**
உயர்திரு *'ஓம்சக்தி'* மாத இதழ் ஆசிரியர் அவர்கள்,

1. இந்தியாவில் இசுலாமியர் ஆட்சியின் காரணமாகப் பரவிய இசுலாமிய மதக் கருத்தோட்டங்களும், கிறித்துவ மதத்தினர் ஆட்சியின் காரணமாகப் பரவிய கிறித்துவ மதக் கண்ணோட்டமும் இந்துக்களைச் சிந்திக்க வைத்தன. இவர்கள் தங்களுடைய *ஹிந்துமதத்தை* ஆராயப் புகுந்தார்கள்.

அப்பொழுதுதான் சமசுகிருத மொழியும், அதனுடைய வேதங்களும், உபநிடதங்களும், சுருதிகளும் (ஸ்மிருதி), ஆகமங்களும், சாத்திரச் சம்பிறதாயங்களும், சடங்குகளும், ... <u>பொருளற்றவையாகவும், பயனற்றவையாகவும் (Meaningless and Useless)</u> தெரிந்தன. உடனே இவர்கள் திகைக்கவும், திணறவும், திக்குமுக்காடவும், கலங்கவும், குழம்பவும் செய்தார்கள்.

அவர்களைப் பொறுப்பாகவும், பொறுமையாகவும், நிதானமாகவும், சமாதானமாகவும், அமைதியாகவும், அன்பாகவும், அரவணைத்து

விளக்கங்கள் வழங்கி வழிநடத்துவதற்கு *ஹிந்துமத*த்தில் தலைவர்களே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை. இதற்கு மாறாக தலைவர்களாகக் கருதப்பட்ட சங்கராச்சாரியார்களும், பிற ஆச்சாரியார்களும் பிரமண உயர்வு, சனாதன தருமம், வருணாசிரம தருமம், தீண்டாமைக் கொடுமை, சாதிவெறி, சாதிகளுக்கிடையில் வேற்றுமையும், உயர்வு தாழ்வும், ... முதலிய கண்மூடித்தனமான மடமைகளை வெறித்தனமாக வளர்த்தார்கள்.

யாருமே, இந்த *ஹிந்துமத*த்திற்கு அடிப்படை தமிழ்நாட்டிலுள்ள அல்லது தென்னிந்தியாவிலுள்ள <u>சைவ சமயமும், வைணவ சமயமும் பிறப்பதற்குக் காரணமாக இருக்கும் பதினெண்சித்தர்களின் 'சித்தர்நெறி' எனும் **மெய்யான இந்துமதம்**தான்</u> என்ற பேருண்மைகளில் முறையான ஆராய்ச்சிகளை நிறைவாகச் செய்யவில்லை, செய்யவில்லை, செய்யவில்லை. எனவேதான் ஆத்திக வெறி கொண்ட மக்கள், அதாவது கடவுளின் அன்பையும், அருளையும் தேடிய மக்கள் இசுலாமியம், கிறித்துவம் ஆகிய மதங்களையும் விருப்பத்தோடு ஏற்றுக் கொண்டார்கள். இப்படி, மாற்று மதத்துக்குப் போக விரும்பாதவர்கள் சீர்திருத்தவாதிகளாகவும், நாத்திகர்களாகவும் மாறினார்கள்.

2. *பொய்யான ஹிந்துமத*த்தின் தலைவர்களாகவும், புரோகிதர்களாகவும் இருந்து இம்மதத்தின் சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளின் மூலம் மக்களைச் சுரண்டியும், ஏமாற்றியும், அடக்கி ஆதிக்கம் செலுத்தியும், வசதியாக வாழ்ந்து பழகிட்ட இவர்கள் சீர்திருத்த வாதிகளையும் (Reformers), பகுத்தறிவுச் சிந்தனையாளர்களையும் (The Rationalistic Thinkers), புரட்சிகர மாற்ற உறுப்பினர்களையும் (The Radicalists), நாத்திகர்களையும் (The Atheists) ... கண்மூடித்தனமாக எதிர்த்தும், தாக்கியும், வெறுத்தும், மறுத்தும் கண்மூடித்தனமாக செயல்பட்டிட்டார்கள்.

**<u>குறிப்பு</u>**:- இப்படி *ஹிந்துமதத்*தின் ஆச்சாரியார்களும், புரோகிதர்களும் காட்டுமிராண்டித்தனமாக சீர்திருத்தவாதிகளேயும், பகுத்தறிவுவாதிகளேயும், நாத்திகர்களேயும் எதிர்த்து விமரிசித்தும், தாக்கிப் போரிட்டும் செயல்பட்டிட்டதற்குக் காரணமே '<u>*பொய்யான ஹிந்துமதத்தின்* **மூலம் அல்லது அடிப்படை** (இந்த 1986ஆம் ஆண்டுக் கணக்கின்படி) 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னுல் இளமுறியாக் கண்டம் என்ற குமரிக்கண்டத்தில் பதினெண்சித்தர்களால் பிறப்பிக்கப்பட்ட **மெய்யான இந்துமதம்** தான்</u>' என்ற பேருண்மை வெளிப்பட்டு விடக் கூடாது என்பதுதான்.

எனவே, இன்றுள்ள மத ஆராய்ச்சியாளர்கள், மதச் சிந்தனேயாளர்கள், மதவாதிகள், நாத்திகவாதிகள், பகுத்தறிவுவாதிகள், சீர்திருத்தவாதிகள்,... முதலிய அனேவரும் *பொய்யான ஹிந்துமதத்து*க்கும் **மெய்யான இந்துமத**த்துக்கும் உள்ள அனேத்துவிதமான தொடர்புகளேயும், வேறுபாடுகளேயும், போராட்டங்களேயும் வரலாற்றுப் பூர்வமாக தெரிந்து கொண்டேயாக வேண்டும், தெரிந்து கொண்டேயாக வேண்டும், தெரிந்து கொண்டேயாக வேண்டும். அப்பொழுதுதான் இந்தத் திருநாட்டின் மதத்துறை வாய்மையும், தூய்மையும், உய்வும், துய்ப்பும், பயனுமுடைய ஒன்ருக மாறிடும், மாறிடும், மாறிடும். எனவேதான், இந்து மறுமலர்ச்சி இயக்கம் **மெய்யான இந்துமதமும்** *பொய்யான ஹிந்துமதமும்* என்ற தலேப்பில் கட்டுரைகளே வெளியிடுகிறது.

அன்பு

அருள்மிகு தில்லேப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப்பெருமான் சன்னிதானம்

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

சென்னை-11
18.3.1986

# இந்துமதம் பற்றிய தவறான கருத்துக்களுக்கு கண்டிப்பு, திருத்தம்.

ஆசிரியர் பகீரதன் *'ஓம்சக்தி'* 1985 டிசம்பர் மாத இதழில் 'ராஜாராம் மோகன்ராய்' என்ற தலைப்பில் (பக்கம் 32-37) எழுதியுள்ள கட்டுரையில் இந்துமதம் பற்றிய தவறான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

***1. "வைதீகம் என்ற சொல் வேதம் என்பதிலிருந்து பிறந்தது. வைதீக மதத்தைத் தீவிரமாக அடியோடு எதிர்த்துக் கண்டித்த பவுத்தமும் இந்நாட்டில் வாழவில்லை. அரைகுறையாக எதிர்த்த சமணமும் பரவவில்லை."***
***2. "ஆனால் நேரடியாகவும் மறைமுகமாகவும் அதைத் தழுவிக் கொண்ட சைவமும் வைணவமும் நன்கு பரவிவிட்டன."***

## மறுப்பும் விளக்கமும்:-

1. இங்கு வேதம் என்ற சொல்லால் ஆசிரியர் பகீரதன் குறிப்பிடுவது பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்களின் சமசுகிருத மொழியிலுள்ள நான்கு வேதங்களையேயாகும். ஆனால், வடஆரியர்கள் கி.மு.3000க்குள்தான் இந்துமதத்துக்குரிய இந்திய மண்ணிற்கு வந்தார்கள். ஆனால், 43,73,086

ஆண்டுகளுக்கு முன்னுல் பதினெண்சித்தர்கள் தோற்றுவித்த **மெய்யான இந்துமத**த்தில் தமிழ்மொழியில் நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், 64 வகையான அருட்கலைகள், முறைகள், நெறிகள், வேதங்கள், நவநாதங்கள், பதினெண்சித்தங்கள், 36 போதங்கள், 48 ஓதங்கள் (இவை 62, 64, 96 என்று மூன்று வகையான எண்ணிக்கைகளை பெற்றிருக்கின்றன என்ற குறிப்பு குருபாரம்பரியத்தில் உள்ளது), நேம நியம நிடத நிட்டைகள், சுருதி ஆரண ஆகம மீமாம்சைகள், சாத்திற சூத்திற தோத்திற நேத்திற அத்திறங்கள், ஓம ஓக யாக யக்ஞ வேள்விகள், சித்த தவ பூசை ஞானங்கள், ... என்ற வழிவகைகளால் "**... அகத்தில் தீ பற்ற வைத்து ('அகத்தில் தெய்வீகத் தீ மூட்டி' என்ற பாடவேறுபாடு ஏடுகளில் காணப்படுகிறது) அருளுணர்வை நிலையாகத் தக்க வைத்துக் கொள்ளும் பதினெண்சித்தர்களின் இந்துமதமே வைதீக மதம்**" என்று குருபாரம்பரிய வாசகம் இருக்கிறது.

இதற்கு விளக்கமாக "**<u>வை+தீ+அகம் => அகத்தில் அருட்பெரும் சுடர் பரப்பும் தெய்வீகத் தீயை மூட்டி அணையாமல் பாதுகாத்து வைத்திருக்க உதவும் சித்தர்நெறி யெனும் இந்துமதம்</u>**" என்ற மிகச் சிறப்பான விளக்கம் குருபாரம்பரியத்தில் வழங்கப் பட்டிருக்கிறது. இதன் கீழேதான் மூலப் பதினெண்சித்தர்களும், மூலப் பதினெட்டாம்படிக் கருப்புக்களும் **இந்து** என்ற சொல்லுக்கு வழங்கிய 48 வகையான பொருள்களும் (1.விந்து, 2.வித்து, 3.எழில், 4.ஒளி, 5.ஒலி, 6.வளம், 7.வலிவு, 8.பொலிவு, 9.அழகு, 10.எழில், 11.பொழில், 12.செழுமை, 13.கொழுமை, 14.அன்பு, 15.பற்று, 16.பாசம், 17.நட்பு, 18.மகிழ்ச்சி, 19.நிறைவு, 20.அமைதி, 21.சமாதானம், 22.அருள்... என்று 48 சொற்கள் 48 வகையானப் பொருள்களைக் கூறும் வண்ணம் மூலப் பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புக்களாலும் அருளப்பட்டதாக முதல் பதினெண்சித்தர்

பீடாதிபதியின் குருபாரம்பரிய வாசகத்திலுள்ளன. இவர் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அருதிகாலத்து கருவூரார் என்று குறிக்கப்படுகிறார்) விளக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள், "... **இந்து** என்ற சொல்லுக்குக் கடந்த நான்கு யுகங்களாக பொருள் விளக்கம் கூறும் சொற்கள் நூற்றுக்கணக்கில் வளர்ந்து விட்டன. **இந்துமதம்** இம் மண்ணுலகம் முழுவதும் பரவி வேரூன்றி விட்டதால் **இந்து** என்ற சொல்லுக்கு விளக்கம் கூறும் சொற்களில் பல்வேறு மொழிகளின் சொற்களும் கலந்துள்ளன," என்ற குறிப்பையும் வழங்குகிறார்.

இத்துடன், அவர் மேலும் கூறுவதாவது, "... **இந்துமதம்** ஓர் அகல்விளக்கின் சுடரொளியாக மட்டும் இருந்துவிடக் கூடாது அல்லது பயன்பட்டு விடக்கூடாது. அது, பூசைக்குரிய ஐந்தீ வேட்டலின் வேள்வித்தீயாக, யாகத்தீயாக, யக்ஞத்தீயாக, ஓமத்தீயாக, ஓகத்தீயாக அவிர்ப்பலிகளை ஏற்றும், தீமைகளை எதிர்த்துச் சாம்பலாக்கியும், 48 வகையான வழிபடு நிலையினர்களையும் தன்னிடத்தில் நேரில் தோன்றும்படிச் செய்தும், அருளுலகப் பொருளுலக இருள்கள் அனைத்தையும் அகற்றும் அருட்பெருஞ்சோதியாக இருக்க வேண்டும். இந்தச் சோதி ஏம சோதியாக, காமசோதியாக, சோமசோதியாக, வாமசோதியாக வளர்ந்து ஏமகோடிப் பீடம், காமகோடிப் பீடம், சோமகோடிப் பீடம், வாமகோடிப் பீடம் என்ற நான்கு பட்டங்களை உருவாக்குகிறது..." என்று குறிக்கின்றார்.

எனவே, வைதீகம் என்ற சொல் இன்றுள்ள பிருமணர்களுக்குரிய *பொய்யான ஹிந்துமதத்திலுள்ள* வேதத்தின் அடிப்படையாகப் பிறந்த ஒரு சொல் அல்ல! அல்ல!! அல்ல!!! அல்லவே அல்ல! என்ற கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்தி திரு பகீரதன் அவர்களுக்குத்

தமது மறுப்பைத் தெரிவித்துக் கொள்ளுகிறுர் எங்களது குருதேவர், தலேவர், இந்துமதத் தந்தை, ஞானச்சாரியார், குவலய குருபீடம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள்.

**குறிப்பு**:- இன்றைக்கு அருளாட்சி நாயகமாக அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் எங்களது குருதேவர் அரசயோகியாக, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, இராசிவட்ட நிறைவுடையாராக, ஆத்தாள் அமளிகையாக, பராசத்தி திருவடியாக, கொற்றவை இருக்கையாக நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்ந்து இருள்களனேத்தையும் அகற்றுகிறுர் என்பதால்; உயர்திரு பகீரதன் போன்ற பழம்பெரும் எழுத்தாளர்கள் எல்லாம் அன்புகூர்ந்து தங்களுடைய தவறுன கருத்துக்களுக்கு வருத்தத்தைத் தெரிவித்து உரிய திருத்தங்களே வெளியிட வேண்டுகின்றோம். அன்புகூர்ந்து கருத்துத் திருத்தங்களேத் தனிமனிதர்களுக்கு விடுக்கப்படும் மறுப்பாகவோ, எதிர்ப்பாகவோ கருத வேண்டாம். எங்களுடைய குருதேவர் வழங்குவதெல்லாம் தத்துவ விளக்கம்தானே தவிர தத்துவச் சண்டைகளுக்குரிய வித்துக்கள் அல்ல.

***2. "... ஆனுல் நேரடியாகவும், மறைமுகமாகவும் அதைத் தழுவிக் கொண்ட சைவமும் வைணவமும் நன்கு பரவிவிட்டன."***

## மறுப்பும் விளக்கமும்:-

இதில் சைவ மதத்திற்கும் வைணவ மதத்திற்கும் முன்பே தோன்றிய ஒன்றே பிருமணர்களின் வேதமதம் என்ற கருத்து வெளிப்படுகின்றது. இது தவறு. சைவம் என்ற மதம் சிவனே

வழிபடுகின்ற மதம் என்று பொருள்படும். அதாவது, சிவநெறி என்பது சீவநெறி (= ஆவி + ஆருயிர் + ஆன்மா பற்றிய நெறி) என்பதை அடிப்படையாகக் கொண்டதேயாகும். ஏனென்றால், '<u>சிவனை வழிபடும் சிவநெறி சைவநெறி</u>' என்பதே குருபாரம்பரிய விளக்கம்.

பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் (கி.மு.100 முதல் கி.பி.150 முடிய) குருபாரம்பரிய வாசகத்தில், "... மரக்கறி உணவுண்டு இறைச்சியுணவை மறுத்தும் வெறுத்தும் சிவபூசை செய்பவர்களைச் சைவர் என்று கூறும் மரபு தவறான மரபு. ஏனெனில், **<u>சிவபூசை என்பது குருதிப் பலியும், பல்வேறு வகையான இறைச்சியின் அவிர்ப்பலியும் இடம் பெறக் கூடிய ஒன்றாகும்</u>**." இது பற்றி 'இறைச்சியும் இறையும்' என்று இவரும், இவருக்குப் பின்வந்த 11வது பதினெண்சித்தர் பீடாதிபதியும் (கி.பி.785 முதல் கி.பி.1040 முடிய) எழுதியுள்ள குருபாரம்பரிய வாசகங்கள் நிறைய உள்ளன.

எனவே, <u>பிருமணர்களின் வேதமதத்துக்குப் பின்புதான் சைவமதம் தோன்றியது என்று கூறுவது தவறு.</u>

இதேபோலத்தான் திருமாலை வழிபடும் வைணவ மதம் முதல் இரண்டு உகத்திலிருந்தே வழக்கத்திலிருந்து வருகின்ற ஒன்று என்பதால்; அது கி.மு.3000 ஆண்டுகளுக்குள் இந்தியாவுக்குள் வந்த பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் <u>வடஆரியரின்</u> (ஆரியர் என்ற சொல் ஏற்கனவே இந்துமதத்தில் ஆரம்பக் காலத்திலிருந்து நான்கு யுகத்திலும் இருந்து வருகின்ற காரணத்தினால் கி.மு.3000க்குள் வெளிநாட்டிலிருந்து வந்த பிறமண்ணினர்களாகிய பிருமணர்களைத் தனித்து வேறுபடுத்திக் காட்டிடவே அவர்களைக் குறிக்க வடஆரியர் என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.) <u>வருகைக்குப் பிறகு தோன்றிய வைதீக மதத்தின் அடிப்படையில்</u>

இருந்து தோன்றியது என்று கூறுவது தவறு. அன்புகூர்ந்து திருந்தவும், கருத்துக்களைத் திருத்திக் கொள்ளவும்.

உண்மையுள்ள,
அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப் பெருமான் சன்னிதானம் சித்தரடியார்.

**//உண்மை நகல்//**

நகல் நல்குபவர்:-அருள்மிகு வேம்படிதாளம் காமகோடிப் பீடாதிபதி, பெரியவாள், மகேசுவர ஆச்சாரியார், கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியான் சீ.மணி, 2/24, புதிய வீதி, வேம்படிதாளம்-637504. சேலம் மாவட்டம்.

**//இதன் மூலநகல்: சித்தரடியான் சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

"நெருப்புக் கோளமாய் நெடிது நாளிருந்து, பின்னே பனிக்கோளமாய் நெடிது நாளிருந்து, பின்னே நீர்க்கோளமாய் நெடிது நாளிருந்து, பின்னே கல் மண் தோன்றிப் பாழிடமாய் நெடிது நாளிருந்து, இறைமையணுக்கள் பருவத்தால் ஊற்றெடுக்கப் பயிர்களும் உயிர்களும் தோன்றின. இம்மண்ணுலகின் ஈசனே மணீசன். அவனே மணிதன். மண்ணில் பிறந்த மணிதன். மனத்தால் உயர்ந்ததால் மனிதன் ஆனான்."

[**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்கள் எழுதியருளிய *குருவாசகம் - முதற்பகுதியில் 9ஆம் பத்தி*]

சென்னை-11
24/3/86

# திருத்தக் கருத்துக் கட்டுரை வெளியிட வேண்டும் திருமடல்

**அனுப்புனர்:-**
இளந்துறவி சுந்தரானந்தா மற்றும்
இந்து மறுமலர்ச்சி இயக்க இளைய தலைமுறை,
C/O குவலய குருபீடம், குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் கருவூரர்,
சென்னை.

**பெறுநர்:-**
உயர்திரு பெருமதிப்பிற்குரிய ஆசிரியர்
'*ஓம்சக்தி*' மாத இதழ்.

**பொருள்:-** இந்துமதம் பற்றியும் தமிழ்மொழி பற்றியும் சில திருத்த விளக்கக் கருத்து மடல் - '*ஓம்சக்தி*' யில் வெளியிட வேண்டல்.

ஐயா!

1) தங்களுடைய '*ஓம்சக்தி*' மாத மலரில் டிசம்பர் மாதத்துக்குரியதில் (1985) தாங்கள் எழுதியுள்ள இராசாராம் மோகன்ராய் என்ற கட்டுரையில் (பக்கம் 32 முதல் 37 வரை) ஒருசில கருத்துக்கள் தமிழ்மொழிக்கும், **மெய்யான இந்துமத**த்துக்கும் அப்பாற்பட்டவைகளாக இருக்கின்றன. இதுபற்றி எங்களுடைய குருதேவர் இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், ஞானத்தந்தை, அருளாட்சி நாயகம், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள்

சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார், குவலய குருபீடம் அவர்களிடம் கடந்த மூன்று (3) மாதங்களாகப் பலமுறை ஐயங்கள் கேட்டு இளைய தலைமுறையினர் பெற்ற விளக்கங்களில் ஒரு சிலவற்றைத் தங்களுக்கே நேரடியாக எழுதித் தங்களுடைய '*ஓம்சக்தி*' இதழில் வெளியிட்டிடுமாறு செய்திட முன்வந்துள்ளோம்.

2) எங்களுடைய இந்த முயற்சிக்கு எங்களுடைய குருதேவர் இன்றைய பத்திரிகை உலகின் இருண்ட நிலையை விளக்கி யுரைத்து எங்களுக்குத் தோல்வி கிடைத்தால் மனத் தளர்ச்சியோ, சீற்றமோ வரக் கூடாது என்று அறிவுரை வழங்கினார். ஏனென்றால், கால் நூற்றாண்டுக் கால அளவுக்கு மேலாக எங்களது குருதேவர் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள நாத்திக ஆத்திகப் பத்திரிகைகள் அனைத்திற்கும் (தமிழ், ஆங்கிலம் = நாளேடு, வார இதழ், திங்கள் மலர், தனிப் புத்தகங்கள் வெளியிடும் பதிப்பகங்கள்) அனைத்திற்கும் எண்ணற்ற கட்டுரைகளை அனுப்பி யனுப்பி அலுத்துப் போனவர். அதாவது, இந்தப் பத்திரிகை உலகம் விரல்விட்டு எண்ணக் கூடிய முதலாளிகளிடமும் எழுத்துலகச் சர்வாதிகாரிகளிடமும் -தான் அடங்கிக் கிடக்கிறது என்ற பேருண்மையை அநுபவத்தால் உணர்ந்தவர்.

எனவேதான், படித்த, படிக்காத, வேலைபார்க்கின்ற, வேலைபார்க்கும் இளைஞர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அவரவரால் இயன்ற பண உதவியை வழங்கி இயக்க உறுப்பினர்களுக்கு என்ற அளவில் 'குருதேவர்' என்ற மாதமலரை அச்சிட ஆரம்பித்தோம். இந்த மலர் மூன்றாவதாண்டு வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

எங்களால் படித்த கூட்டத்தினருக்கு சுருக்க விளக்கக் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தப்படல் வேண்டும் என்பதற்காக தனிப்புத்தகங்களாகச் சுமார் (10) பத்துப் புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறோம். சில நூற்றுக்கும் மேற்பட்ட அறிவிக்கைகள் பல்வேறு தலைப்புக்களில் நூறாயிரக் கணக்கில் அச்சிட்டு நாடு முழுவதும் வழங்கியிருக்கிறோம்.

நாங்களும் எங்களது குருதேவரும் மாதத்திற்கு பலநூறு மைல்கள் நாட்டின் பட்டிதொட்டி குக்கிராமங்களுக்கிடையில் எல்லாம் சென்று எங்களுடைய தத்துவப் பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகிறோம். அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய கலைகளைப் பகுத்தறிவுப் போக்கிலும், விஞ்ஞானச் சூழலிலும் (With a Rationalistic Approach and in a Scientific Atmosphere) ஆர்வமும் ஆற்றலும் முயற்சியும் உடையவர்களுக்கு வழங்கியதன் பயனாக நாற்பது (40) இடங்களுக்கு மேல் அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்களை நிறுவியுள்ளோம். இவற்றின் மூலம் மக்களின் அக இருளையும், புற இருளையும் அகற்றி மனித நல்வாழ்வுக்குரிய ஒற்றுமை, தோழமை, நட்பு, கூட்டுறவு, கூட்டுடமை, அன்பு, பாசம், கனிவு, சமாதானம், பணிவு, துணிவு, உண்மை, உழைப்பு, கட்டுப்பாடு, மூத்தோரை மதித்தல், முன்னோரை வழிபடல், மொழி இனம் பண்பாடு நாடு நாகரிகம் ... என்ற விழிப்புணர்வோடும், நம்பிக்கையுணர்வோடும் இருத்தல் ... முதலிய பண்புநலன்களைப் பசுமையோடு வளர்த்து வருகிறோம்.

இந்த நிலையில்தான் என் போன்று பல இளந்துறவிகள் முழுநேர ஊழியராகப் பதினெண்சித்தர்கள் 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டம் என்கின்ற குமரிக் கண்டத்தில் தங்களுடைய தாய்மொழியான அண்டபேரண்டமாளும் அருளுலக

ஆட்சிமொழியான அமுதத் தமிழ்மொழியில் வழங்கிய **மெய்யான இந்துமத**த்தின் மூலம்தான் தாய்நாட்டு மக்களை ஒற்றுமைப்படுத்தி ஒருமைப்படுத்த முடியும் என்று முடிவெடுத்துச் செயல்படக் கிளம்பியுள்ளோம்.

நாங்கள் சாதி, மத வெறிகளுக்கு அப்பாற்பட்டவர்கள். உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை விரும்புகிறவர்கள். இந்த மண்ணுலகில் சித்தர்நெறிப்படி உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் முழுமையான அளவில் போதுமான செயல்நிலையில் துவக்கப் பட்டேயாக வேண்டும் என்று முயலுகின்றவர்கள். எங்களுடைய தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும் ஏட்டுச் சுரைக்காய்களாக வைத்திருக்காமல் நாட்டு நடப்பில் பயிர் செய்து அவை முளைத்தும் கிளைத்தும் செழித்தும் வளர்ந்து கொழுத்த பயனைத் தருவதை அநுபவப் பூர்வமாக்கி வருகிறோம்.

நாங்கள் எதையும் சிந்திக்கத் தயாராக இருக்கிறோம். யாரையும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். எங்களிடையில் தனிமனித ஆதிக்கமும் தத்துவ ஆதிக்கமும் இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை. எனவே, எங்களிடமுள்ள ஆயிரமாயிரம் இளைஞர்கள் தங்களைச் சித்தர் மகனாகவும் (குருதேவரின் மகனாக), குருதேவரின் பதிலியாகவும், குருதேவரின் வாரிசாகவும் உருவாக்கிக் கொண்டுதான் பொருளுலக அருளுலக இருளகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம்.

3) ஐயா, மதத்தால்தான் **விலங்கு நிலையிலிருந்த மணீசர்கள்** பண்பட்ட மனிதர்களாக்கப் பட்டார்கள். <u>இன்றைக்கு வளர்ந்து வரும் விஞ்ஞானத்தாலும், அரசியலாலும் மணீசர்கள் மீண்டும் உருவாகியுள்ளார்கள்</u>. (மண் + ஈசர் = மண்ணின் தலைவர் = மணீசர் = The Primitive Man, The Uncivilized Man). சித்தர்களின்

ஏடுகளில் மணீசர்கள்தான் மனிதர்களாஞர்கள் என்று தெளிவான வாசகம் உள்ளது.

**<u>குறிப்பு</u>**:- ஐயா, சித்தர்கள் பயன்படுத்திய 'மணீசர்' => மணிசன் => மனிதன் ... என்ற சொற்களே மனிதகுலத்தின் முழுமையான வரலாற்றை விளக்குவனவாகவே உள்ளன. இதுபோலத்தான் பதினெண்சித்தர்கள் பயன்படுத்திய ஆயிரக்கணக்கான சொற்கள் இந்த மண்ணுலகையும், இம்மண்ணுலகின் தொடர்பான வானையும், விண்ணையும், வானியல் பொருள்களையும், மண்ணியல் பொருள்களையும், இம்மண்ணில் உள்ள பயிரின உயிரினங்களையும், ... இவற்றின் இயக்கங்களையும், நுட்பதிட்ப ஒட்பமாக விளக்கக் கூடிய கலைச்சொற்களாக (The Technical Terms which will give the proper, appropriate and finite definitions about the whole universe and cosmic universe) இருக்கின்றன.

இப் பேருண்மையினை அருளுலகும் பொருளுலகும் தெரிந்து புரிந்து தெளிந்துணர்ந்து ஏற்றுப் பயன்படுத்துவதைப் பொறுத்துத்தான் உலகம் தழுவிய சமய மறுமலர்ச்சி (The International Religious Renaissance) விளைந்திடும். அப்பொழுதுதான், மதச் சமத்துவமும், சகோதரத் தத்துவமும், பொதுவுடமையும், கூட்டுடமையும், நல்லுறவும் விளைந்திடும், விளைந்திடும், விளைந்திடும். அப்பொழுதுதான் தனிமனித விடுதலை, பொருளாதார விடுதலை, சமுதாய விடுதலை, அரசியல் விடுதலை, மொழி விடுதலை, இன விடுதலை, பண்பாட்டு விடுதலை, நாகரிக விடுதலை, ... முதலிய பல விடுதலைகள் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படும் நிலை உருவாகிடும். அதுதான் தூய்மையும், வாய்மையும் மிக்க மெய்ம்மைச் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

எனவேதான், நாங்கள் **இந்து** என்ற சொல்லுக்கு மூலப் பதினெண்சித்தர்கள் வழங்கிய 48 பொருள் விளக்கச் சொற்களையும்;

காலப்போக்கில் தோன்றிய நூற்றுக் கணக்கான பொருள் விளக்கச் சொற்களையும் விளக்கியுரைப்பதோடு பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியரின் *ஹிந்து* என்ற சொல்லுக்கும், சொல்லால் விளைந்த பொருளுக்கும் விளக்கம் தர முற்படுகிறோம். **நாங்கள் கண்மூடித்தனமாகப் பிருமண மறுப்பையும், வெறுப்பையும், எதிர்ப்பையும் வளர்ப்பவர்கள் அல்ல. பிருமணர்களும் மெய்யான இந்துமதத்தைப் பயன்படுத்தி மிகச் சிறந்த பத்திநிலைகளையும் சத்திநிலைகளையும், சித்திநிலைகளையும், முத்திநிலைகளையும் அடைய வேண்டுமென்பதுதான் எங்களது நோக்கம்.** விரிவஞ்சி அஞ்சலை நிறைவு செய்கிறோம். எங்களுடைய கட்டுரையை வெளியிடா விட்டாலும் இவ்வஞ்சலுக்காவது பதில் எழுதுங்கள்.

அன்பு
இளந்துறவி சுந்தரானந்தா

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல் சித்தரடியார் ஏ.இரவி அவர்களின் கையெழுத்திலும், இளந்துறவி சுந்தரானந்தா அவர்களின் கையெழுத்திலும் இருந்தது.//**

பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் இம்மண்ணுலகுக்கு வரும் போதே பேசிட்ட மொழிதான் தமிழ்மொழி. இம்மொழியின் ஒவ்வொரு ஒலியும் அண்டப் பெருவெளியில் கோடிக்கணக்கில் இயங்கும் நாள்களும், கோள்களும், மீன்களும் எழுப்பும் ஒலிகளின் அடிப்படையான உயிர்ப்பொலியாகும்.

[**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்கள் எழுதியருளிய *குருவாசகம் - முதற்பகுதியில் 41ஆம் பத்தி*]

# எங்களுக்குத் தெரியும்; உங்களுக்கு?!?!?!... ... ...

***கேள்வி:-***

தமிழ்நாட்டில் தமிழர்களிடையே தோன்றித் தமிழால் வாழும் பிறமண்ணினரான பிருமணர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும், அடிமைகளும் (தாசர்களும்) பிடிவாதமாகத் தமிழ்க் கொலை, சித்திரவதை செய்கிறார்களே ஏன்?

***பதில்:-***

| | | |
|---|---|---|
| விசுவநாதன் | => | விஸ்வநாத் |
| விசுவேசுவரம் | => | விஸ்வேஸ்வரம் |
| பிறகலாதன் | => | ப்ரஹ்லாத் |
| சாணகி (சாணுகிக் கிடந்தவள்) | => | ஜானகி |
| சேத்திரம் (சேத்திறம், சேத்தரம்) | => | க்ஷேத்ரம் |
| இலிங்கம் | => | லிங்கம் |
| சாத்திரம் (சாத்திறம், சாத்தரம்) | => | ஸாஸ்த்ரம் |
| சோதி | => | ஜ்யோதி |
| கிருட்டிணேசுவரர் | => | க்ருஷ்ணேஸ்வரர் |
| திரவியம்பலகேசுவரர் | => | த்ரயம்பகேஸ்வரர் |
| பூசை (பூ + செய்) | => | பூஜை |
| அருட்சினை | => | அர்ச்சனை |

| | | |
|---|---|---|
| நீராட்டு | => | அபிஷேகம் |
| சுடர் | => | ஜ்வாலே |
| மீனாட்சி | => | மீனாக்ஷி |
| காமாட்சி | => | காமாக்ஷி |
| விசாலாட்சி | => | விஸாலாக்ஷி |
| பத்தி | => | பக்தி |
| சத்தி | => | சக்தி |
| சித்தி | => | ஸித்தி |
| முத்தி | => | முக்தி |
| பூ | => | புஷ்பம் |
| சலம் | => | ஜலம் |

… … …

விரிவஞ்சி இந்தச் சொற்களின் பட்டியலே நிறுத்துகிறோம்.

இந்தத் தமிழ்க் கொலேயை, சித்திரவதையைத் தட்டிக் கேட்கத் தமிழ் இலக்கியவாதியோ, சமயவாதியோ, சமுதாயவாதியோ, அரசியல்வாதியோ.... முன்வராதது ஏன்?

பிருமணர்கள் திருந்துவார்களா? திருந்த மறுப்பது ஏன்? சுயமரியாதை இயக்கப் பாரம்பரியம், திராவிடப் பாரம்பரியம் … … என்பன சமாதுக்குள்ளாகி விட்டதால்?!?! .... …

**//உண்மை நகல்//**

**//மூல நகல்: குருதேவர் அவர்களால் எழுதப்பட்டுள்ள 4 பக்க நகல்.//**

# <u>எங்களுக்குத் தெரியும் ... ...</u>
# <u>உங்களுக்கு?!?!?!</u>

**இந்து மத**த்தில் முதலாளித்துவமும், மடமையும், ஏமாற்றும், சுரண்டலும், பொய்யும், புளுகும், ஆபாசமும் கலந்து உருவாக்கப் பட்ட கலப்படமதம்தான் *ஹிந்து மதம்*. இதன் தலைவர்கள் பிருமணர்களே; இதன் மொழி சமசுகிருதமே; இதன் ஆயுள் மூவாயிரமாண்டுகளே.

ஆனால், **இந்து மதத்** தலைவர்கள் தமிழர்களே; இதன் மொழி அமுதத் தமிழ்மொழியே; இதன் ஆயுள் 43,73,115 ஆண்டுகள் (கி.பி.2014இல்) இம்மண்ணுலகில் பெற்றுள்ளது.

[இது பல நூறாயிரம் கோடி ஆண்டுகளாக விண்வெளி அண்டங்களிலும் பேரண்டங்களிலும் வாழ்ந்து வரும் மதம். தமிழ்மொழி வழியாகத்தான் 48 வகைச் சித்தர்கள், வழிபடு நிலையினர்கள், வழிபாட்டு நிலையங்கள், கருவறை மூலவர்கள், அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், ஆச்சாரியார்கள்.... .... எனப்படும் அனைவரும் பயிற்சி முயற்சி தேர்ச்சி முதிர்ச்சி பெற முடியும்]

எனவேதான் **இந்துமதமும்** *ஹிந்து மதமும்* கலப்படச் சண்டைகளால் மக்களைக் கலக்கமும் குழப்பமும் சலிப்பும் ஏமாற்றமும் அடைந்து புதிய மதங்களைத் தேடி நாடிச் செல்லச் செய்தது. இந்த நிலையில் செய்ய வேண்டியன என்னென்ன? அவற்றை யார்? யார்? எவ்வப்பொழுது? எப்படி யெப்படிச் செய்ய வேண்டும்?!?!... என்ற உண்மைகள் <u>எங்களுக்குத் தெரியும், உங்களுக்கு?!?!?!</u>....

# எங்களுக்குத் தெரியும்! .... உங்களுக்கு?!?!

**கேள்வி:-** வடலூர் அருட்பாக் கொடை வள்ளல் இராமலிங்க அடிகளார் ‘அருட்பெருஞ்ஜோதி’ என்று வடமொழி (சமசுக்கிருதம்) எழுத்தைத்தான் பயன்படுத்தினரா? இந்த அருட்பெருஞ்ஜோதி வழிபாடு இவரால்தான் கண்டுபிடிக்கப்பட்டதா? மற்ற கடவுள்களை மறுத்து இந்த ‘அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்’ என்ற கடவுளை எப்படிக் கண்டுபிடித்தார்? எப்போது கண்டுபிடித்தார்?!?!?!....

**பதில்:-** இராமலிங்க அடிகளார் படிப்படியாக எல்லாக் கடவுள்களையும், கருவறை மூலவர்களையும் தெய்வம், தேவதை, ... எனப் படுபவர்களையும் வழிபட்டே பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளைப் பெற்றார். இவர், ஞானசித்தர் என்பதால் சிவவாக்கியர் எனும் ஞானசித்தர் போல் உருவ வழிபாட்டையும் வழிபாட்டு நிலையப் பெருமைகளையும், திருத்தல அருளூற்று நிலைகளையும் துறந்தார், மறந்தார்.... .... இது, ஞானசித்தர் தத்துவமாகும்.

சோதி => ஜோதி என்று சமசுக்கிருத வெறியர்களால் எழுத்து மாற்றம் செய்யப்பட்டது. இது, பிருமண தாசர்களின் தொடர் போக்கே. சோதி வழிபாடு தமிழர்க்கே உரியதாகும்.

“மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்”
“தீப மங்கள சோதீ நமோ நம”
“ஆதியு மந்தமுமிலா அரும்பெருஞ் சோதி”
“திருவையா றகலாத செம்பொற் சோதி”

... .... .... என்று பன்னிரு திருமுறைகளில் உள்ள இவை போன்ற வாசகங்களே வினாக்களுக்குரிய விடையை வழங்கிடும்.

**//உண்மை நகல்//**

**//மூல நகல்: குருதேவர் அவர்களால் எழுதப்பட்டுள்ள 4 பக்க நகல்.//**

# எங்களுக்குத் தெரியும்! உங்களுக்குத் தெரியுமா?

***1) கேள்வி:- மார்கழி மாதம் பீடை மாதம் என்பது சரியா?***

**பதில்:- மெய்யான இந்துமத**த்திற்கும் *பொய்யான ஹிந்துமதத்திற்கும்* இடையேயுள்ள வரலாற்று வேறுபாடுகளையும், தத்துவ சித்தாந்த புராண இதிகாச பழக்க வழக்க சடங்கியல்..... வேறுபாடுகள், மாறுபாடுகள் முதலிய அனைத்தையும் விளக்கி யுரைக்கும் பணி துவக்கப் பட்டு இருப்பதே இந்து மதத்தையும், இந்துமத மூலவர்களான தமிழர்களையும், இந்துக்களையும் காப்பாற்றுவதற்குத்தான். தங்களுடைய கேள்வியின் விளக்கம் இப்பணிக்கு அணி செய்யும்.

நண்பா! ஆண்டுக்குரிய 12 மாதங்களையும், வாரத்துக்குரிய ஏழு (7) நாட்களையும், அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆண்டுகளின் பெயர் துவக்கத்திலிருந்து மீண்டும் வரும் செயல் திட்டத்தையும் வகுத்தவர்கள் இம்மண்ணுலகின் இயற்கையின் விதிகளை ஆராய்ந்த பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் ஆவார்கள். இவர்களின் கருத்துப்படி மாதங்களில் சிறந்தது மார்கழி மாதம்தான். எந்த நல்ல காரியம் துவக்க வேண்டுமென்றாலும் இந்த மார்கழியில்தான் துவக்க வேண்டும். அதாவது திருமணம், கால்கோள் விழா, குருகுலக் கல்வி, வழிபாட்டு நிலையப் பூசைகள் ..... முதலிய அனைத்தும் மார்கழி மாதத்தில்தான் செய்ய வேண்டும் என்பது **மெய்யான இந்துமத**த்தில் சட்டபூர்வமான அதிகாரப் பூர்வமான விதியாகும்.

"பீடு நிறைந்த மாதம் = பெருமைகள் மிகுந்த, அரியன செய்தற்குரிய மாதம்; வாழ்வியல் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் உகந்த மாதம்;

'பீட மாதம்' = அருட்பீடம், குருபீடம், கருப்பீடம், கருமப்பீடம், திருப்பீடம்...... முதலிய பீடங்களை அமைப்பதற்குரிய குலவளர் மாதம் = அருளுலகுக்கு மிக மிக சிறந்த மாதம்."

"அனைத்து வகையான கலை வல்லார்களும் இந்த ஒரு திங்கட்குரிய முப்பது (30) நாட்களும் அதிகாலையில் தங்களுடைய கலைகளைப் பயிற்சி செய்தால் நல்லது. அவர்கள் ஆண்டு முழுதுமுள்ள 11 மாதங்களில் பயிற்சி செய்யாவிட்டாலும் பாதகமில்லை....." என்று இப்படிக் குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், குருபாரம்பரியம் முதலியவை தெளிவாகக் கூறுகின்றன.

எனவே, மார்கழி மாதத்தைப் பீடை மாதமென்று வெறுத்து ஒதுக்கும் கருத்தையும், பழக்கத்தையும் புகுத்தியவர்கள் பிற மண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்களே. அதாவது இந்த வடஆரியர்கள் **மெய்யான இந்து மத**த்தையும், இந்து மத மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்களையும் அருள் அற்றவர்களாக, ஆற்றலற்றவர்களாக, முறையான பயிற்சியும் தேர்ச்சியும் பெற முடியாதவர்களாகச் செய்வதற்காகத்தான் ***பொய்யான ஹிந்து மதத்தின்*** மூலம் மார்கழி மாதத்தை வெறுத்து ஒதுக்கச் செய்தார்கள். இதனைப் புரிந்து நம்மவர்கள் இனிமேலாவது மார்கழி மாதத்தை சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் MR சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'

**காலம்:** பதினெண் சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்

**இந்துமத நூல்கள்:** 108 பூசைமொழி நூல்கள்,
48 பூசைவிதி நூல்கள்
96 தத்துவ நூல்கள்
144 செயல் சித்தாந்த நூல்கள்
36 குருபீட நூல்கள்
ஆக மொத்தம் 432 நூல்கள்

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

***இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்***

***அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.***

***அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.***

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்

அருளை அநுபவப் பொருளாக வழங்குவதே சித்தர் நெறி!



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com